**இலங்கை நீதிவான்களின் நிறுவனம் - 2023**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை நீதிவான்களின் நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் சபை

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனத்தின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் குறித்தொதுக்கப்பட்ட அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களுக்கு மாத்திரம் அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ‘‘முறையாக திட்டமிடப்பட்ட’’ உள்ளகக் கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவனத்தினால் பேணிச் செல்லல் அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 65 ஆம் பந்திக்கு இணங்க சொத்தொன்றின் மீதிப் பெறுமதி மற்றும் பயன்பாடு ஆயுட்காலத்தை கழித்த பின்னர் ஒவ்வொரு ஆண்டிலும் அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதித் தினத்தன்று மீளாய்வாய்வு செய்ய வேண்டியிருந்த போதிலும், நிறுவனத்தின் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முழுமையாக பெறுமானத்தேய்வு கழித்து முடிவடைந்திருந்த ரூபா 49,234,914 தொகை பெறுமதியான அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள், கணினி உபகரணங்கள் மற்றும் மின்சார உபகரணங்கள் மீளாய்வு செய்திருக்கவில்லை. அதன்படி மதிப்பீட்டு வழு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் படி திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நீதி அமைச்சின் மற்றும் நீதிவான்களின் நிறுவனத்தின் அங்கத்தவர்கள் அடங்கிய மீளாய்வுக் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன், குழு சொத்துக்களை மீளாய்வு செய்யும் கருமங்கள் முடிவடைந்தவுடன் உடனடியாக கணக்கீட்டு நியமத்தின் படி நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க சொத்துக்களை மீளாய்வு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் அடங்கியுள்ள ரூபா 3,517,995 இற்கான சட்ட தரவு களஞ்சிய முறைமை (Legal Data Base) – சொத்துக்கள் தொடர்பாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 20 இன் பந்தி இலக்கம் 117 இன் பயன்பாடு ஆயுட்காலம் உறுதியற்றதா அல்லது உறுதியானதா என, | இந்த சொத்துக்களை மீளாய்வு செய்வதற்கு தொழிநுட்ப சாத்தியம் உடைய அங்கத்தவர்கள் அடங்கிய தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவொன்று மற்றும் சொத்துக்கள் மீள்மதிப்பீட்டு குழுவொன்று நியமனம் செய்யபட்டுள்ளதுடன், அந்தக் குழுக்களின் பரிந்துரையின் படி தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படவுள்ளது என | குறிப்பிட்ட கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க குறிப்பிட்ட வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உறுதியற்றதெனின் பயன்தரு ஆயுட்காலம் அல்லது பயன்படுத்தப்பட்ட பெறுமானத்தேய்வு விகிதாசாரம் மற்றும் உறுதியற்ற பயன்தரு ஆயுட்காலத்துடனான அருவச் சொத்துக்களுக்காக பயன்படுத்தப்பட்ட பெறுமானத்தேய்வு செய்முறையை வெளிப்படுத்தியிருக்கவில்லை. | அறிவிக்கின்றேன். | |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 20 இன் 31 ஆம் பந்திக்கு இணங்க அருவச் சொத்துக்கள் ஆரம்ப கிரயத்தில் கணிக்க வேண்டியிருந்த போதிலும் சட்ட தரவு களஞ்சிய முறைமை தயாரிப்பதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 2,112,195 தொகை நிதிக் கூற்றுக்களில் ரூபா 3,517,995 தொகை என மூலதனப்படுத்தப்பட்டிருந்த காரணத்தினால் அருவச் சொத்துக்கள் ரூபா 1,405,800 தொகை மிகையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | சட்ட தரவு களஞ்சிய முறைமையை அபிவிருத்தி செய்வதற்காக பங்களிப்பு செய்யப்பட்ட வெளிநாட்டு நிறுவனத்தினால் அந்த தகவல்கள் அவர்களிடம் காணப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்ததுடன் சொத்துக்கள் மீள்மதிப்பீட்டு குழுவின் மற்றும் தொழிநுட்ப மதிப்பாய்வு குழுவின் பரிந்துரையின் படி இந்த சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு மதிப்பீடு செய்யப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | மூலதன மானியங்களை கணக்கீடு செய்யும் கொள்கை 2021 ஆண்டு முதல் மாற்றப்பட்டிருந்த போதிலும் அது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் 44 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் நிறுவனத்தினால் 2021 மற்றும் 2022 ஆண்டுகள் தொடர்பாக பிற்போடப்பட்ட வருமானம் என இனங்காணப்பட்டிருந்த ரூபா 1,311,907 தொகை மீளாய்வாண்டின் நாட்குறிப்புப் பதிவின் மூலம் திரட்டிய மிகை/ (பற்றாக்குறை) கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு பங்களிப்பு மூலதன கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக அந்த பெறுமதியினால் திரட்டிய மிகை/ (பற்றாக்குறை) குறைவாகவும், பங்களிப்பு மூலதனக் கணக்கின் மீதி மிகையாகவும் நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | 2024 ஆண்டு இதனை சரி செய்து மூலதனக் கணக்கின் மீதி, திரண்ட மிகை/ (பற்றாக்குறை) சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் மூலதன மானியங்கள் பெறுவனவு ரூபா 315,999 தொகை மற்றும் வருவாய் மானியங்கள் பெறுவனவு ரூபா 18,346,346 தொகை நிதிச் செயலாற்றல் கூற்றில் வெவ்வேறாக காட்டப்பட வேண்டியிருந்த போதிலும், மூலதன மானிய பெறுவனவுகள், வருவாய் மானியம் என காட்டப்பட்டிருந்தது. | இந்தத் தவறினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது. | மானியங்களின் பெறுவனவுகள் சரியாக நிதி செயலாற்றுகை கூற்றில் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு நிதி நிலைமைக் கூற்றில் மூலதன மானிய மீதி ரூபா 17,003,576 தொகை மற்றும் திரண்ட பற்றாக்குறையின் மீதி ரூபா 10,302,382 தொகை எனினும், அதற்கு நேரொப்ப தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்றின் படி அந்த மீதி ரூபா 18,315,483 தொகை மற்றும் ரூபா 11,614,289 தொகை ஆக இருந்தமையால் மீதிகளிடையே ரூபா 1,311,907 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது. | 2021 மற்றும் 2022 ஆண்டுகள் தொடர்பாக பிற்போடப்பட்ட வருமான சீராக்கல்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த 12/136 கொண்ட நாட்குறிப்பு பதிவு தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்றில் காட்டப்பட்டிருந்தமையால் இந்த வித்தியாசம் ஏற்பட்டிருந்ததென அறிவிக்கப்பட்டிருந்தது. | தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | பெறுமதி<br>ரூபா. | வழங்கியிருக்காத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் | 3,057,383 | இன்வொயிஸ், பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை | 2012 ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்திருந்த சொத்துக்கள் தொடர்பாக இன்வொயிஸ்கள் அல்லது பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகள் நிறுவனத்திடம் காணப்படாததுடன், முன்னைய ஆண்டுகளுக்கான காசேடுகள் மற்றும் கணக்குகளின் மூலம் தகவல்கள் பெற்றுக் கொண்டு நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டது என அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்கள் மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| i. 103(1)ஆ | 2019 செப்தெம்பர் 11 திகதி ஏற்பட்டிருந்த வாகன விபத்து தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் அவ்வாறான தாமதங்கள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| ii. 104(3) | 2019 செப்தெம்பர் 11 திகதி ஏற்பட்டிருந்த வாகன விபத்து தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் படி ஆரம்ப விசாரணையின் நாள் குறிப்பிடப்பட்டிருக்காமையின் காரணத்தினால் காலதாமதத்தை உறுதிப்படுத்த முடியாமல் இருந்ததுடன் அறிக்கை 3 வருடங்களுக்கு பின்னர் முழுமையாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான தாமதங்கள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| iii. 104(4)(xi) | எதிர்காலத்தில் இவ்வாறான நட்டங்கள் சேதங்கள் தவிர்ப்பதற்காக எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பான முழுமையான அறிக்கையில் உட்படுத்த வேண்டியிருந்த போதிலும் மேற்கூறிய விபத்து தொடர்பாக முழுமையான அறிக்கை அவ்வாறு மேற்கொண்டிருக்கவில்லை. | அடுத்த அறிக்கைகளில் குறிப்புகள் பதிவு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| iv. 168(3) | பயன்படுத்துவதற்கு முன்னர் அனைத்து பற்றுச்சீட்டுக்களிலும் திகதியை பதிவு செய்து திணைக்களத்தின் முத்திரை பதிக்க வேண்டியிருந்த போதிலும் 05 பற்றுச் சீட்டுக்கள் தொடர்பாக இவ்வாறு செய்திருக்கவில்லை. | அதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| v. 225(1) | அனைத்து கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களும் உரிய படிவங்களில் சரியாகவும் முழுமையாகவும் நிரப்பி தயாரிக்கப்பட்டிருந்த உறுதிச் சீட்டுக்கள், அனைத்து கொடுப்பனவுகளுக்காகவும் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 274,960 தொகைக்கான 06 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் தொடர்பாக செலவுகளை சான்றுபடுத்திய திகதி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட திகதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | இதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| vi. 262(2) | • ஒரு தடவை கொடுப்பனவு செய்யப்பட்ட உறுதிச் சீட்டொன்று மீண்டும் ஒருமுறை கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படும் ஆபத்து நிலைமை ஒன்று ஏற்படக்கூடும் என, கொடுப்பனவு செய்யப்பட்ட அனைத்து உறுதிச் சீட்டுக்களும் அவற்றை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களின் மேற் பகுதியில் ‘‘கொடுப்பனவு செய்யப்பட்டது’’ முத்திரை பதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 10,080 தொகைக்கான 10 சிறு காசு உறுதிச் சீட்டுக்கள் தொடர்பாக அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அனைத்து சிறிய பில் பத்திரங்களிலும் ‘‘செலுத்தப்பட்டது’’ என்ற முத்திரையை பதிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| | • அனைத்து கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களிலும் காசேட்டில் குறிப்பிடப்பட்ட திகதி ‘‘செலுத்தப்பட்டது’’ என்ற முத்திரை இடப்பட்டு இருக்க வேண்டியிருந்த போதிலும் ‘‘செலுத்தப்பட்டது’’ என்ற முத்திரை பதியப்பட்ட நாள் மற்றும் காசேட்டில் பதியப்பட்டுள்ள நாள் வித்தியாசப்பட்ட ரூபா 122,799 தொகை | எதிர்காலத்தில் நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க காசேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியே ‘‘செலுத்தப்பட்டது’’ முத்திரையிலும் பதிவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெறுமதியான 03 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் தொடர்பாக உண்மையாகவே கொடுப்பனவு செய்யப்பட்ட நாள் கணக்காய்வில் உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது. | | |
| | vii. 1645 (ஆ),(இ) | நிதிப் பிரமாணங்களின் படி 02 வாகனங்கள் தொடர்பாக நாளாந்த ஓட்ட அட்டவணைகள் முறைப்பிரகாரம் மற்றும் நாளதுவரை ஆக்கப்பட்டு பேணிச் சென்றிருக்கவில்லை. | நாளாந்த ஓட்ட அட்டவணைகள் முறைப் பிரகாரம் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| | viii.1646 | பிரயாணங்கள் தொடர்பாக மாதாந்த பொழிப்பின் முதற் பிரதியுடன் ஒவ்வொரு மாதத்தினதும் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 02 வாகனங்கள் தொடர்பாக 2023 ஆண்டு தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 ஆண்டிற்குரிய ஓட்ட அட்டவணைகள் எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2017 ஜுன் 28 ஆந் திகதிய 01/2017 இலக்கங் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | சொத்துக்கள் மற்றும் கிரய முகாமைத்துவத்திற்காக அரசாங்கத்தின் அனைத்து நிதியல்லாத சொத்துக்களும் ஆவணப்படுத்துவதற்குரிய 2023 ஆண்டின் தகவல்கள் கொம்ட்டோலர் ஜனரலுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 3.1 | ஒரு வாகனம் தொடர்பாக எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொண்டிருக்கவில்லை. | எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட NC 3601 வேன் வண்டி தொழிநுட்ப ஆலோசனையாளரின் அவதானிப்பு அறிக்கை கிடைத்த பின்னர் CAK 0230 கொண்ட மோட்டார் வண்டியின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது என அறிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பொது தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டு கைநூலில் பிரிவு 6.6 | நியதிச் சட்ட நிறுவனங்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைபு வருடாந்த அறிக்கையொன்று நிதிக் கூற்றுக்களுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு முடியாமல் போனதனால் இத் தாமதம் ஏற்பட்டது என அறிவிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 118,263 இற்கான பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 6,925,257 தொகை காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 6,806,994 இற்கான முன்னேற்றம் ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு 2023 ஆண்டின் அரச மானியப் பெறுவனவுகள் ரூபா 5,873,372 இனால் அதிகரித்தல் மற்றும் பயிற்சி வழங்கள் நிகழ்ச்சித் திட்டங்களுக்கான செலவு ரூபா 3,015,740 இனால் மற்றும் அச்சுக் செலவுகள் ரூபா 200,688 இனால் குறைவடைதல் பிரதானமான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஆண்டின் போது ரூபா 2,212,195 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்திருந்த சட்டத் தரவு களஞ்சிய முறைமை இதுவரை பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதுடன், தற்போது செயற்படாத நிலைமையில் காணப்படுகின்றது. | இதனை நாளதுவரை ஆக்குவதற்கான செய்முறை தொடர்பாக மொரட்டுவ பல்கலைக்கழக விஷேடத்துவர்களினால் அறிக்கையொன்று தயாரித்து அனுப்ப வேண்டியுள்ளது எனவும், அந்த அறிக்கை கிடைத்த பின்னர் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்ட தரவுகள் களஞ்சிய முறைமை பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.2 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 இலக்கங் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்திக்கு இணங்க வருடாந்த பெறுகை திட்டம் நடைமுறை ஆண்டு திசெம்பர் 10 திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு அதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தை | சுற்றறிக்கைக்கு இணங்க வருடாந்த பெறுகைத் திட்டம் குறிப்பிட்ட திகதியில் தயாரிக்கப்பட்டு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தை பெற்று எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெற்று அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும், நிறுவனத்தின் 2023 ஆண்டின் பெறுகை திட்டம் 2023 நவம்பர் 16 திகதியே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் பந்தி 4.2.2(அ) இற்கு இணங்க பெறுகை அலுவல்கள் ஆரம்பிக்கப்படும் சந்தர்ப்பத்திலிருந்து பூர்த்தி செய்யப்படும் வரை ஒவ்வொரு பெறுகை செய்முறையின் கட்டங்கள் கால ஒழுங்குமுறைப்படி விவரிக்கப்பட்ட பெறுகை நேரசூசி ஒன்று நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பெறுகை திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பெறுகை அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பம் முதல் இறுதி வரை ஒவ்வொரு பெறுகை செய்முறைகளிலும் கட்டங்கள் வெவ்வேறாக காட்டப்பட்டிருக்காததுடன், அலுவல்களை ஆரம்பிப்பதற்கு மற்றும் பூர்த்தி செய்யப்படுவதற்கு உரிய நாட்கள் உட்படுத்தப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட பெறுகை வழிகாட்டலுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2023 ஆண்டு ரூபா 3,544,000 இற்கான மதிப்பீட்டுக் கிரயமொன்றின் கீழ் 10 பெறுகை கருமங்கள் மேற்கொள்வதற்காக பிரதான பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2023 ஆண்டு இறுதிளவிலும் ரூபா 1,940,166 இற்கான பெறுமதி கொண்ட பெறுகை கருமங்கள் ஐந்து மாத்திரம் செயற்படுத்தப்பட்டு இருந்தது. அத்துடன் பெறுகை திட்டத்தில் காட்டப்பட்டுள்ள மதிப்பீட்டுக் கிரயத்தின் 45 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | கட்டுநிதிகள் வரையறுக்கப்படல், செலவுகள் கட்டுப்பாட்டு சுற்றறிக்கைகள் மற்றும் மேல் மாடியின் திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்படாமை என்பன இதற்கான காரணங்களாக காணப்பட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது. | பெறுகை திட்டத்தின் படி செயற்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு பெறுகை திட்டத்திற்கு புறம்பாக ரூபா 45,999 தொகை பெறுமதியான கையடக்கத் தொலைபேசி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் தேவைப்பாட்டின் படி ரூபா 45,999 தொகை பெறுமதியான தொலைபேசி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டதுடன் நீதிவான்களின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் அறிவுருத்தலை செயற்திறனுடன் மேற்கொள்வதற்காக இது பயன்படுத்தப்பட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது. | பெறுகை திட்டத்தின் படி செயற்பட வேண்டும். |
| (உ) | 2023 ஆண்டின் பாதீட்டு மதிப்பீட்டின் படி மூலதனச் செலவுகளுக்காக ரூபா 2,000,000 தொகை ஒதுக்கப்பட்டு இருந்ததுடன், அவற்றில் ரூபா 315,974 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் படி மதிப்பீட்டு ஏற்பாடுகளில் 84 சதவீத எண்ணிக்கை ஒன்று செலவிடப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. | மேல் மாடியின் திருத்த வேலை அலுவல்கள் மேற்கொள்ளப்படாமை மற்றும் செலவுகள் கட்டுப்பாட்டு சுற்றறிக்கையின் படி பணம் பெற்றுக் கொள்வதில் வசதியீனங்கள் ஏற்பட்ட காரணத்தினால் மூலதன ஏற்பாடுகள் அனைத்தும் பயன்படுத்தப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது | மதிப்பீட்டு ஏற்பாடுகளை குறைபயன்பாடு மேற்கொள்ளக் கூடாது. |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 26 தொகையாக காணப்பட்ட போதிலும், 08 பதவிகளில் 11 ஊழியர்கள் பற்றாக்குறையாக இருந்தது. அது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 42 சதவீதத்தை கொண்டிருந்தது. | 2024 ஏப்ரல் 24 திகதிய முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் அந்தப் பதவிக்காக ஆட்சேர்ப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்கள் தாமதமின்றி நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1985 இன் 46 ஆம் இலக்க இலங்கை நீதிவான்களின் சட்டத்தின் பந்தி இலக்கம் 05 (ஈ) இன் பிரகாரம் நீதிமன்ற உத்தியோகத்தருக்காக நூலக வசதிகள் வழங்குதல் நிறுவனத்தின் அடிப்படை குறிக்கோளாக காணப்பட்ட போதிலும் நூலகர் பதவி 2023 திசெம்பர் 31 திகதியளவிலும் வெற்றிடமாகக் காணப்பட்டது. மேலும் செயலாளர், தொழிநுட்பவியலாளர் ஆகிய பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டது. | நூலகர் மற்றும் தொழிநுட்பவியலாளர் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பதற்காக 2024 ஏப்ரல் 08 திகதிய முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது எனவும், செயலாளர் பதவிக்காக இரண்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டதுடன் ஒரு பெண் விண்ணப்பதாரி மாத்திரம் சமூகம் அளித்ததுடன் அவர் பதவியை ஏற்க மறுத்திருந்தார் என அறிவிக்கப்பட்டிருந்தது. | வெற்றிடங்களை தாமதமின்றி நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பந்தி இலக்கம் 40(1) இன் படி நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வு அலுவல்கள் மேற்கொள்வதற்காக அந்த நிறுவனத்தின் ஆளுகை சபையினால் நியமனம் செய்யப்படுகின்ற தமது உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் இருக்க வேண்டிய போதிலும், நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளகக் கணக்காய்வாளர் பதவியொன்று உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நீதி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்வு செய்யப்படுவதனால் தனியாக உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்தல் தேவைப்படாது எனவும் 2022 ஏப்ரல் 25 திகதிய நீதி அமைச்சின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது என அறிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட சட்டத்திற்கு இணங்க உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட வேண்டும். |